# மாடம்பாக்கம் பேரூராட்சி

**காஞ்சிபுரம் மாவட்டம்.**

ந.க.எண்.227/2010 நாள்: 25.05.2010

# ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

**1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும்**

மாடம்பாக்கம் பேரூராட்சிக்காகவும் அதன் சார்பாகவும் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் **2010.2011ன் கீழ்** கீழ்க்குறிப்பிட்ட விவரத்தில் கண்டுள்ளபடி பணிகள் மேற்க்கொள்ள மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து 17.06.2010ம் தேதி வியாழன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகார நேரத்தின்படி) செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் அன்று பிற்பகல் 3.30 மணி அளவில் அப்போது வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும். பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் இப்பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் 16-06-2010 அன்று பிற்பகல் 3.00 மணி வரை உரிய தொகை ரொக்கமாக செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பணி தொடர்பான இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம். முன் வைப்புத்தொகையை 16-06-2010 தேதி அன்று பிற்பகல் 4.00 மணிக்குள் ரொக்கமாக செலுத்தி உரிய ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | காப்புறுதி தொகை (ரூபாய்) | ஒப்பந்தப் புள்ளி படிவவிலை (ரூபாய்) | பணி முடிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|---|
| | **அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமர்ச்சி திட்டம் 2010–2011** | | | | |
| 1. | பேரூராட்சி பதுவஞ்சேரி பகுதியில் ஒரு திறந்தவெளிக் கிணறு அமைத்தல் பணி | 715000 | 7150 | 3100 | **120** நாட்கள் |
| 2. | நூத்தஞ்சேரி தாங்கல் பகுதியில் ஒரு திறந்தவெளிக் கிணறு அமைத்தல் பணி | 715000 | 7150 | 3100 | **120** நாட்கள் |
| 3. | கிரேட்டர் கைலாஷ் நகர் பூங்கா அபிவிருத்தி பணி | 750000 | 7500 | 3100 | **90** நாட்கள் |
| 4. | குமாரசாமி நகர் பூங்கா அபிவிருத்தி பணி | 750000 | 7500 | 3100 | **90** நாட்கள் |
| 5. | மாடம்பாக்கம் பகுதி மிதந்த விநாயகர் கோயில் அருகில் உள்ள குளம் மேம்பாடு செய்தல் பணி | 800000 | 8000 | 3100 | **90** நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | கிரேட்டர் கைலாஷ் நகர் பின்புறம் திறந்தவெளிக்கிணறு அமைத்தல் பணி | 715000 | 7150 | 3100 | **120** நாட்கள் |
| 7. | பதுவஞ்சேரி பகுதியில் அமைந்துள்ள வணிக வளாகத்தில் முதல் தளத்தில் கடைகள் கட்டுதல் பணி | 1300000 | 13000 | 6680 | **180** நாட்கள் |
| 8. | நூத்தஞ்சேரி கிராம மயானத்தை மேம்பாடு செய்தல் பணி | 450000 | 4500 | 3100 | **90** நாட்கள் |
| 9. | மாடம்பாக்கம் கிராம மயானம் மேம்பாடு செய்தல் பணி | 450000 | 4500 | 3100 | **90** நாட்கள் |

## நிபந்தனைகள்

1) தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 43/1998 மற்றும் விதிகள் 2000ம் படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்,

2) *2009-2010ம் ஆண்டிற்கான* ***31.3.2010*** *முடிய உள்ள காலத்திற்கு தொழில் வரி செலுத்தி அதற்கான ரசீது நகல் இணைக்கப்பட வேண்டும்*

3) ஒப்பந்ததாரர்கள் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே ஒப்பந்தப்புள்ளிக்கான விலைப்புள்ளிகள் அடங்கிய படிவத்தில் விலைப்புள்ளிகள் குறித்து மேற்படி வேலைக்கான மதிப்பீட்டின்படி 1% விழுக்காடு வைப்புத் தொகை செலுத்தப்பட்டு அதற்கான ரசீது இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

4) இப்பேரூராட்சியில் பதிவுப் பெற்ற ஒப்பந்ததாரர்கள் அன்றி பிற ஒப்பந்ததாரர்கள் மேற்படி வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி அளிக்க உத்தேசிக்கும் பட்சத்தில் இப்பேரூராட்சியின் விதிமுறை களுக்குட்பட்டு அசல் செல்வ நிலை சான்றுடன் அதற்கான கட்டணம் செலுத்தி ஒப்பந்ததாரராக பதிவு செய்த பின்னரே ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்படுவார்கள்.

5) மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர் குறைந்த பட்சம் ஐந்தாண்டுகள் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6) ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமான வரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.

7) இப்பேரூராட்சியில் கடைசியாக நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்ளாதவர்களுக்கு ஷெட்யூல் வழங்கப்பட மாட்டாது.

8) ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்படும் போது விற்பனை வரித்துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்றினை இணைக்கப்பட வேண்டும்.

9) ஒப்பந்தப்புள்ளிகள், குறிப்பிட்டுள்ள கால வரையரைக்குள் மட்டும் பெற்றுக் கொள்ளப்படும் அஞ்சல்வழி மூலம் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான கால தாமதத்திற்கு பேரூராட்சி பொறுப்பேற்க இயலாது.

10) அடித்தல் திருத்தலின்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள், பிணை வைப்புதொகையின்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதுமின்றி தள்ளுபடி செய்யப்படும். எக்காரணம் அறிவிக்காமல் எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவோ (அ) மறுக்கவோ செயல் அலுவலர் அவர்களுக்கு பூரண அதிகாரம் உண்டு.

11) ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்கு பிறகே வேலைக்கான உத்தரவு வழங்கப்படும்.

12) ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன் பேரூராட்சி அலுவலகத்தில் வழங்கப்படும் மாதிரி படிவத்தில் ரூ.20/- மதிப்புள்ள அரசு முத்திரை தாளில் ஒப்பந்தம் செய்து தருவதுடன் மேற்படி வேலைக்கான மதிப்பீட்டின் படி 2% விழுக்காடு வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும்.

13) வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க தவறினால் அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை (DEPOSIT) பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

14) வேலை செய்ய அனுமதி பெற்ற ஒப்பந்ததாரர் வேலை வேறு ஒருவருக்கு மறு ஒப்பந்தம் செய்வதோ அல்லது வேறு நபருக்கு மாற்றுவதோ கூடாது.

15) வேலைகள் நடைபெறும் போது உயர் அதிகாரிகள் மற்றும் பொறியாளர்கள் கட்டிட பொருட்கள் தரம் தொடர்பாக சான்று கோரப்படும் போது பெற்று தர ஒப்பந்ததாரர் கட்டுப்பட்டவராவார்.

16) கட்டிட பணிக்கு பயன்படுத்தப்படும் சிமெண்ட் மற்றும் கம்பி தரமானதாக இருக்க வேண்டும். மேலும் கட்டிட பணிக்கு தேவையான நல்ல தண்ணீர் பயன்படுத்துவதுடன் 15 தினங்களுக்கு தொடர்ந்து தண்ணீர் ஊற்றப்பட வேண்டும்.

17) வேலைகள் முடிவு பெற்றபின் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களின் அளவுகள் மேல் அளவுகள் அளவு புத்தகத்தில் பதிவு செய்து மேலொப்பம் வழங்கிய பின்னரே அதற்கான பட்டியல் தொகை வழங்கப்படும்.

18) ஒப்பந்தப்புள்ளி வேலைகளுக்காக செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து , தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும். மேற்படி வைப்புத் தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

19) வேலைகள் முடிக்கப்பட்டு பணம் பட்டுவாடா செய்யும் போது அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் வருமானவரி, மேல்வரி, விற்பனைவரி, ஆகியவைகள் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

20) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் பணிகளுக்கான தார் மற்றும் சிமெண்ட ஒப்பந்ததாரரே தன்னுடைய சொந்த செலவில் வாங்கி உபயோகிக்க வேண்டும், மேலும் உபயோகப்படுத்திய பொருட்களுக்கு தரச்சான்று பெற்று தர வேண்டும்.

21) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் பணிகளுக்கான PVC பைப் மற்றும் உதிரி பாகங்கள் ஒப்பந்ததாரரே தன்னுடைய சொந்த செலவில் வாங்கி உபயோகிக்க வேண்டும், மேலும் உபயோகப்படுத்திய பொருட்களுக்கு தரச்சான்று பெற்று தர வேண்டும்.

22) கட்டிட தொழிலாளர் நிதி மதிப்பீடு தொகையில் 0.3% வங்கி வரைவோலை பெற்று, பணி உத்திரவு வழங்கப்படும் போது கொடுக்கப்பட வேண்டும்.

23) இதர நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துக்கொள்ளலாம்.

24) பணிகள் துவக்கப்படுவதற்கு முன்பு, நடைபெறும்பொழுது மற்றும் பணி முடிந்தவுடன் புகைப்படம் எடுத்து பணி முடிவறிக்கையுடன் இணைக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலர்,
மாடம்பாக்கம் பேரூராட்சி

<u>பெறுநர்:</u>

1. பதிவு செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்ததாரர்கள் மாடம்பாக்கம் பேரூராட்சி.
2. அலுவலக விளம்பரப் பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய

} சான்று அஞ்சலில்.

<u>நகல்:-</u>

1) பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை -108 அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2) மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4) உதவி செயற் பொறியாளர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்காக
5) தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள், மாடம்பாக்கம் பேரூராட்சி
6) உதவி பொறியாளர், சிட்லபாக்கம் பேரூராட்சி அவர்களின் தகவலுக்காக.
7) பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் :- பள்ளிக்கரணை, பீர்க்கங்கரனை, சோழிங்கநல்லூர், செம்பாக்கம், பெருங்குடி - விளம்பரப்பலகையில் வெளியிட